# 1000 வருடங்கள் உயிருடன் இருப்பது எப்படி?

மாலதியைப் பார்க்கப் போனபோது டாக்டர் ராகவானந்தம் மட்டும்தான் வீட்டில் இருந்தார். “மாலதி எங்கே டாக்டர்?” என்றேன்.

“டாக்டர், ஏன் தலைகீழாக நிற்கிறீர்கள்?” என்று கேட்டேன்.

டாக்டர் நிமிர்ந்தார். “யோகாசனத்தில் விஷயம் இருக்கிறது பையா. உட்காரேன். ஒரு சுவாரஸ்யமான விஷயம் உன்னிடம் சொல்ல வேண்டும்,” என்றார்.

“மாலதி இல்லையா?”

“வந்துவிடுவாள், உட்கார்.”

“டாக்டர், நான் போய்விட்டு அரை மணியில் வருகிறேன். கொஞ்சம் அர்ஜெண்டாக வேலை இருக்கிறது.”

“என்ன வேலை?”

“பார்பர் ஷாப் போக வேண்டும்.”

“உட்கார்,” என்றார் டாக்டர். “இதிலே வேடிக்கை என்ன தெரியுமா பையா? நான் தஞ்சாவூர் போய்விட்டுத் திரும்ப வந்ததும் முந்தாநாள் மயிலாப்பூரிலே ஒரு மீட்டிங்கிலே பேசினேன்; பொதுவா விஞ்ஞான ஆராய்ச்சி பற்றி. தமிழில்தான் பேசினேன். பேச்சிலே ‘நாம் ஒண்ணும் புதுசா ஆராய்ச்சி பண்ண ஸப்ஜெக்ட் தேட வேண்டாம். நம்ம பழைய தமிழ்ப் பாட்டுகளிலேயே எவ்வளவோ ஸ்கோப் இருக்கிறது. உதாரணமா 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செந்தில்நாதப் புலவர் ஆயிரக்கணக்கிலே பாட்டெழுதி இருக்கிறார். விதவிதமான வைத்திய முறைகளையும் மூலிகைகளையும் பற்றி. அதையே ரிஸர்ச் பண்ணலாம். அந்த முறைகள் எல்லாம் என்னன்னு கண்டுபிடிக்கலாம்’னு சொன்னேன். பேச்சு முடிந்ததும் என்ன ஆச்சு தெரியுமா?”

“ஸோடா சாப்பிட்டீர்களா?”

“சாப்பிட்டேன். ஹாலைவிட்டு வெளியே வந்தேன். சாயங்கால இருட்டு. வாசலிலே ஒரு பெரியவர் நின்றுகொண்டிருந்தார். ‘வணக்கம்’ன்னார். ‘செந்தில்நாதப் புலவர் எழுதிய பாட்டுகளைப் பற்றிச் சொன்னீர்களே, அந்தப் பாடல்களை எங்கே பார்த்தீர்கள்?” என்று கேட்டார். ‘ஏன், உங்களுக்கு ஆராய்ச்சி பண்ணணுமா?’ என்று கேட்டேன். ‘தேவையில்லையே, நான்தானே செந்தில்நாதப் புலவர்’ என்றார்.”

எனக்கு – அதாவது டாக்டரிடம் கதை கேட்டுக் கொண்டிருந்த எனக்கு – இந்த இடத்தில் உதைத்தது. “டாக்டர், கம் எகய்ன். என் ஞாபக சக்தியில் பழுதில்லை என்றால், சுமார் 16 வரிகளுக்கு முன்னால் செந்தில்நாதப் புலவர் என்பவர் 17ஆம் நூற்றாண்டு ஆசாமி என்று சொன்னீர்கள் என்று நினைக்கிறேன்.”

“ஆம்.”

“17ஆம் நூற்றாண்டில் இருந்தவர் இன்னும் உயிரோடு இருக்கிறாரா?”

“இன்னும் உயிரோடு இருக்கிறார்.”



www.writersujatha.com

“இப்ப இருக்கிறாரா?”

“இப்ப இருக்கிறார். இந்த வீட்டு மாடியிலே உட்கார்ந்திருக்கிறார்.”

“டாக்டர்! அந்தக் கூட்டம் எங்கே நடந்தது என்று சொன்னீர்கள்? கீழ்ப்பாக்கத்திலா?”

“மைலாப்பூரிலே.”

நான் சிரித்தேன்.

“பையா, நீ நம்பலையா?”

“இதை நம்பச் சொல்கிறீர்களா டாக்டர்?”

“மாடியிலே இருக்கிறாரே!”

“செந்தில்நாதப் புலவர்?”

“டிட்டோ.”

“17ஆம் நூற்றாண்டு?”

“டிட்டோ.”

“டாக்டர், மன்னிக்கவும். ஏதாவது போட்டிருக்கிறீர்களா?”

“புரியவில்லை. பையா, நீ சந்தேகப்படுவாய். நம்பமாட்டாய். நானும் முதலில் நம்பவில்லை. இது ஏதோ க்ராக் என்றுதான் நினைத்தேன். ஆனா அந்த ஆசாமியோட கொஞ்சம் பேசினப்புறம் எனக்கு அவர் சொல்றது பொய்யில்லை என்று தெரிந்தது. ஈஸ்ட் இண்டியா கம்பெனி காசு வெச்சிருக்கார்!”

“கட்டபொம்மனுக்குக் கத்தி தீட்டினேன்னு சொன்னாரா? நீங்க நம்பிட்டீங்களா?”

“பையா, நான் அந்த ஆளை லேசிலே நம்பவில்லை. வீட்டுக்குக் கொண்டு வந்து ஒரு நாள் பூரா அவரை ஸைண்டிஃபிக்கா செக் பண்ணிட்டுத்தான் நம்பினேன். அந்த ஆள் ஒரு வொண்டர். ஓர் ஆச்சரியம்.”

“டாக்டர், அந்த ஆள் 17’ம் நூற்றாண்டு என்றால் அவருக்குச் சுமார் முன்னூறு வயசு ஆகி இருக்கணும். தெரியுமா?”

“அவருக்குச் சரியாக முன்னூற்றிரண்டு வயசு ஆகிறது. 1667இல் பிறந்தவர்.”

“1667இல் பிறந்தவர் மாடியிலே உட்கார்ந்திருக்கார்... என்ன, காயகல்பம் சாப்பிட்டாரா?”

“பையா, அவர் சாப்பிட்டது காயகல்பம் இல்லை. அது தேவலோகத்துக் கற்பனை. அவர் மருந்துக்கு ஸைண்டிஃபிக்கா எக்ஸ்ப்ளனேஷன் இருக்கிறது பையா. முதுமைங்கறது எதனால வருகிறது தெரியுமா? எல்லாவற்றுக்கும் இருதயத் துடிப்புதான் காரணம். ஒவ்வொருத்தருக்கும் வாழ்க்கையிலே மொத்தம் இவ்வளவு இருதயத் துடிப்புன்னு கணக்கு. இருதயம் ஒரு மிஷின். அதன் ஆரோக்கியத்திற்கு ஏற்ப இத்தனை தடவை அடிச்சதும் மிஷின் கடியாரம்போல நின்று போய்விடுகிறது. வாழ்நாள்

என்கிறது இவ்வளவு வருஷம் என்று கணக்கில்லை. இவ்வளவு இருதயத் துடிப்பு என்றுதான் கணக்கு. மேலே உட்கார்ந்திருக்கிறாரே மகான், செந்தில்நாதப் புலவர், அவருடைய இருதயம் நிமிஷத்துக்கு நூறு தடவை அடிக்கிறதில்லை. இரண்டே இரண்டு தடவைதான்!”

“டாக்டர், இது எப்படிச் சாத்தியம்?”

“சாத்தியமில்லைன்னுதான் நினைத்தேன் பையா. அவர் இருதயத் துடிப்பை நான் கார்டியோகிராம் ஒன்று கொண்டு வந்து ரிகார்ட் பண்ணிக்கூடப் பார்த்தேன். சரியா நிமிஷத்துக்கு இரண்டு தடவைதான் அடிக்கிறது. டக்... ஒரு முப்பது செகண்ட் கழிச்சு... டக். மறுபடி ஒரு முப்பது செகண்ட் கழிச்சு டக் ... இந்த ரேட்டுக்கு ஏற்ப அவருடைய மெடபாலிஸமே மாறிவிட்டது. நீ பார்த்தால் தான் நம்புவே. ஆச்சரிய சாதனை. பையா, இந்த ரகசியத்தை ஒருத்தரிடமும் சொல்லாதே. வா, அவரைப் போய்ப் பார்க்கலாம்.”

மாலதி வந்தாள். செந்தில்நாதப் புலவரின் மருந்து தேவையில்லாமலேயே சென்ற மாதம் பார்த்ததைவிட இன்னும் இளமையாக இருந்தாள். “அப்பா, அந்தப் பட்சி போய்ட்டாரா?” என்றாள், மாடியைப் பார்த்துக்கொண்டு.

நான், “அவர் போறதுக்கு இன்னும் 1575 வருஷம் ஆகும் என்கிறார் டாக்டர். சரிதானே டாக்டர்?” என்றேன்.

அவள் என்னைப் பார்த்து, “சரியான நட்டைக் கொண்டுவந்து உட்கார்த்தி வைத்திருக்கிறார்... நீயும் இந்தக் கோஷ்டியில் சேருகிறாயா? சென்ற 24 மணி நேரத்திற்குள் அவர் வாங்கிவரச் சொன்ன வஸ்துகளைக் கேள்!” என்று லிஸ்ட்டிலிருந்து படிக்க ஆரம்பித்தாள்:

“ஆவாரங்குச்சி 108

இளநீர் 2

நாமக்கட்டி 2

திரிபலை

துமிட்டிக்காய்

கடுக்காய்

லவங்கம்

ரவிந்திர சூர்ணம் ...

ஃப்பூ! அந்த ஆள் பைத்தியமில்லை; பைத்தியக்காரர்களின் மகாநாடு!”

டாக்டர் சிரித்தார். “மாலதி, உனக்குத் தெரியாது, உனக்கு விவரமாகச் சொன்னாலும் தெரியாது.”

“அந்த ஆள் ஒரு க்வாக். நீ என்ன சொல்கிறாய்?” என்றாள் மாலதி.

“நான் இன்னும் பார்க்கவில்லை அவரை” என்றேன்.

“யாராவது முன்னூறு வருஷமாக உயிரோடு இருக்கிறேன் என்று சொன்னால் அதை நம்பி மாடியிலே உட்கார்த்தி வைத்துச் சாப்பாடு போடுகிறதா?”

“பையா, பெண்களுக்கு, அதுவும் மாலதி போன்றவர்களுக்கு இதெல்லாம் சொல்லி வியர்த்தம். வா, அவர் திரிபலைக்காகக் காத்திருக்கிறார். போய்ப் பார்க்கலாம்” என்றார்.

“மாலதி, நீயும் வாயேன்,” என்றேன்.

“நான் நேற்றுப் பார்த்ததே போதும். ராத்திரி எல்லாம் கெட்ட கனா. எனக்கு இதைவிட முக்கியமான வேலை இருக்கிறது. நெயில் பாலிஷ் போட்டுக்கொள்ளவேண்டும்,” என்றாள்.

டாக்டர் மாடிக்குச் செல்ல நான் தயங்கிக்கொண்டே உடன் சென்றேன். தயங்கி நுழைந்தேன்.

“வருக!” மேஜைக்கு அடியிலிருந்து குரல் கேட்டது.

சூர்ந்து பார்த்ததில் மேஜை அருகில் அந்தப் பக்கம் கீழே சப்பணம் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தார் ஒருவர்.

டாக்டர் சொன்ன 60, 65 வயதுதான் மதிப்பிடலாம். டாக்டரின் சட்டை ஒன்றை அணிந்துகொண்டு லீவு எடுத்துக்கொண்ட ரிஷி மாதிரி உட்கார்ந்திருந்தார். மானாவாரியாகத் தாடி மீசை. எதிரே சம்பந்தா சம்பந்தமில்லாத வஸ்துகள் சிதறியிருந்தன.

“புலவரே, இவர் என் நண்பர்!” என்றார் டாக்டர்.

புலவர் என்னைப் பார்த்தார். ஏற இறங்கப் பார்த்தார்.

நான் உடனே சுத்தத் தமிழில் “வணக்கம் அய்யா” என்றேன்.

புலவர் சிரித்தார், **ஷூ** பாலிஷ் போடும் பிரஷ் சிரிக்கிறாற் போல.

“உம்மைப் பார்த்திருக்கிறேன்” என்றார்.

“எம்மையா?” என்றேன்.

“ஆம். உம்மைத்தான்” என்றார்.

“எம்மே?” என்று கேட்டேன்.

“நினைவில்லையா?”

“நான் உம்மைப் பார்த்ததில்லை” என்றேன். சிரித்தேன்.

“சிரிக்காதீர்” என்றார்.

“சிரிக்கவில்லை” என்றேன்.

“திரிபலை வந்ததா?” என்றார்.

டாக்டர் பொட்டலத்தைப் பிரித்துத் தந்தார். “புலவரே, இது போதுமா?”

“போதும்.”

“புலவர், நீவீர் என்ன செய்யப்போவீர்?” என்று கேட்டேன்.

“உம் நண்பருக்குத் தெரியாதா?” என்றார் டாக்டரிடம்.

“அந்த மருந்தைத் தயார் செய்யப்போகிறார்” என்றார் டாக்டர். மேலும், “இருவரும் நம்ப மறுக்கிறார்கள் உங்களுக்கு முன்னூறு வயதென்று” என்றார்.

“இயல்பே! இயல்பே! ஒவ்வொரு நூற்றாண்டிலும் இப்படித்தான் ஒருவரும் என்னை நம்பவில்லை. ஒவ்வொரு முறையும் நான் என் வாழ்நாளை நீட்டித்துக்கொண்டவன் என்றதும் சிறையில் அடைத்தார்கள். என் சித்தம் சரியில்லை என்று கொண்டு ... எனக்கு மனித இனத்தில் நம்பிக்கை தளர்ந்துவிட்டது. அதைப் பற்றி இந்த நூற்றாண்டில் பேசவேயில்லை. அதனாற்றான் என்னை வெளியே இருக்க அனுமதித்தார்கள். என் நல்லூழ் ராகவானந்தத்தைச் சந்தித்தேன்...”

டாக்டர், “இல்லை புலவரே, இது மனித சமுதாயத்தின் நல் ... நல் ...” என்றார்.

“நல்லூழ்,” என்றேன்.

புலவர் தொடர்ந்தார்: “ஒரே ஒரு தடவை சுமார் அறுபது ஆண்டுகட்கு முன் ஒரு வெள்ளையர் நான் சொல்வதில் உண்மை இருக்கும் என்று தனதில்லம் கொண்டு சென்றார். அவருக்கு மருந்து செய்து தந்தேன். அதில் ஒரு சிறு தவறு ஏற்பட்டுவிட்டது.”

“சிறு தவறு!”

“ஆம். அதை வெள்ளையர் சாப்பிட்டதில் மருந்து வலிது, அவர் புதிதாகப் பிறந்த நாய் போலக் கூவத் தொடங்கிவிட்டார்.”

“அந்தோ!” என்றேன்.

“அதற்காக என்னைச் சிறைப்படுத்திச் சித்திரவதை செய்தனர்.”

“மறுபடி அந்தோ” என்றேன்.

“அச்சமுற வேண்டாம். அந்தத் தவறு நான் வேண்டுமென்றே செய்தது. அப்படி ஒன்றும் இப்பொழுது நிகழாது ...” என்று அந்த ஆவாரங்குச்சிகளை ஒடித்து ஒடித்துப் பொதுவாக அந்தப் பாத்திரத்தில் கொட்டிக் கலக்கினார் புலவர். “இதோ இன்னும் சில நாழிகைகளில் மருந்து கிட்டும் உங்களுக்கு,” என்று சிரித்தார். மறுபடி ப்ரஷ். புலவர் கண்ணை மூடிக்கொண்டு ஏதோ பாடினார்.

டாக்டர் என்னைப் பார்த்துச் சிமிட்டி, “நேரிசை வெண்பா” என்றார்.

அப்புறம் புலவர் தன் ரசாயனத்தில் ஆழ்ந்தார்.

டாக்டர் அருகில் இருந்த மிஷினிலிருந்து நீண்ட வால்போல பேப்பரை உருவினார். புலவருடைய கார்டியோகிராஃப் – அந்தக் காகிதத்தில் சினிமா ஸௌண்ட் ட்ராக்

போல கீறல்கள் இருந்தன. டாக்டர் புரியாதபடி எலக்ட்ரோடுகளை இணைத்ததையும் பற்றிச் சொன்னார். “பையா, நீ ரொம்ப அதிர்ஷ்டக்காரன்” என்றார்.

“அப்படியா டாக்டர்?”

“அவர் தயாரிக்கப்போவது ஒரே ஒரு அவுன்ஸ் மருந்து. அதை நாம் சாப்பிடப்– போகிறோம்.”

“நானுமா?” என்று கேட்டு அதிர்ந்தேன். எனக்கு அறுபது வருடங்களுக்கு முந்தின அந்த வெள்ளையர் நினைவு வந்தது. “டாக்டர், எனக்கு எதுக்கு இந்த வம்பெல்லாம்? நீங்கள் சாப்பிடுங்கள். நீங்கள் விஞ்ஞானி. தொடர்ந்து நீங்கள் உயிர் வாழ்வதில் உலகத்துக்குப் பயன் இருக்கிறது.”

“பையா, நான் எதற்குச் சொல்கிறேன், கேள். நான் ஏற்கெனவே வயதானவன். நான் சாப்பிட்டுவிட்டு ஆயிரம் வருஷம் இருக்கப் போகிறேன் என்று சொன்னால், அந்தப் புலவருக்கு நேர்ந்த கதிதான் எனக்கு நிகழும். கிழவர் ஏதோ போட்டிருக்கிறார், உளறுகிறார் என்று சொல்வார்கள். ஆனால் நீ சாப்பிட்டால் என்ன ஆகும்? நீ இளைஞன். உனக்கு என்ன, இருபத்தேழு வயதிருக்கும். இன்னும் 50 வருஷம் கழித்து இருபத்தெட்டு ஆகும் உனக்கு. ஜனங்கள் ஆச்சரியப்படுவார்கள். எப்படி, இத்தனை வருஷமாக அப்படியே இருக்கிறாய் என்று அவர்கள் உன்னை வந்து கேட்பார்கள். பேப்பரில் போடுவார்கள் ... அப்பொழுது சொல் இந்த மர மண்டைகளுக்கு. ‘லாஞ்சிவிட்’டிக்கு ஒரு மருந்து நம் தமிழ் வைத்தியத்திலே முன்னூறு வருஷமாக இருக்கிறது. அதைத் தெரிஞ்சிக்க முடியாத மடையர்களாய் இருக்கிறீர்கள். நீங்கள் போய் டாக்டர் ராகவானந்தத்தைப் பாருங்கள் என்று. நீயும் சாப்பிடணும், அதுதான் பொருத்தம் பையா.”

“டாக்டர், எனக்கு அவசரமா பார்பர் ஷாப் வரைப் போக வேண்டும்...”

“பையா, இந்த மருந்தைச் சாப்பிட்ட பிற்பாடு 50 நாளைக்கு ஒரு தடவை க்ஷவரம் செய்துகொண்டால் போதும் – யோசித்துப் பார்.”

“இதோ” என்றார் புலவர்.

“எதோ?” என்றேன்.

கண்ணாடி டம்ளரில் ஒரு பழுப்புத் திரவம் இருந்தது. அந்தத் திரவம் கொஞ்சம் கோபமாகப் புகைந்துகொண்டிருந்தது. மற்றொரு டம்ளரை எடுத்து அதைப் பேர் பாதியாகப் பிரித்தார் புலவர். டாக்டர் கையில் கொடுத்தார். என்னிடம் ஒன்று கொடுத்தார். “பருகுங்கள்,” என்றார்.

“பையா, நாம் சரித்திரம் ஏற்படுத்தப் போகிற தருணம் வந்து விட்டது! பையா, மனிதன் கண்டுபிடித்த மருந்துகளின் கொடு முடி இது! அருந்து, பருகு, நுகர்!”

“டாக்டர், தமிழிலே விளையாடறீங்களே!” என்று சொல்லிவிட்டு மெதுவாக அந்த மருந்தை மூக்கருகில் கொண்டு சென்றேன். கிருஷ்ணாயில் வாசனை அடித்தது. உடனே திராட்சைப்பழ வாசனை அடித்தது. உடனே மாம்பலகையை இழைக்கும் தச்சர் வாசனை அடித்தது ... புலவர் ஒரு முறுவல் செய்தார்.

“நீ எந்த மணத்தை நினைத்தாலும் அந்த மணம் தெரியும் இந்த மாமருந்தில். கடிதில் விழுங்கும்,” என்றார்.



www.writersujatha.com

“புலவரே, இதிலே ஏதும் தப்பில்லையே? அந்த வெள்ளைக்காரருக்கு ஏற்பட்டாற் போலே ஏதும் ஆகாதே? உப்பு கிப்பு எல்லாம் சரியாகத்தானே சேர்த்திருக்கிறீர்?”

“கவலுறேல்.”

“அதாவது நீ சாப்பிடு, நான் ‘காரண்டி’ என்கிறீரா?”

“பையா, சேர்ந்தாற் போல சாப்பிடுவோம். ரெடி, ரெடியா?” என்றார்.

“ரெடி” என்றேன். (எனக்குள் யயாதி மாதிரி ஒரு ஆசை இருந்திருக்க வேண்டும். என் இள ரத்தம் சாப்பிட்டுத்தான் பார்க்கலாமே என்று சொல்லியிருக்க வேண்டும். அடுத்த நூற்றாண்டில் பழைய சிவாஜி படங்களை டெலிவிஷனில் பார்க்கலாமே என்று ஆசை இருந்திருக்க வேண்டும்.)

டாக்டர், “ஒன்... டூ... த்ரீ” என்று எண்ண, ஒரே ‘மடக்’கில் மருந்தைக் குடித்தேன்.

சாப்பிட்டவுடனே, புலவரைக் கேட்டேன். “புலவரே, இதில் என்ன சேர்த்திருக்கிறீர்கள், அமிலமா?”

“முதலில் சற்றுச் சுடும். கொஞ்சம் பொறும்.”

“சுடுமா? நைட்ரிக் ஆஸிட்லே முக ஷவரம் பண்ணிக்கொண்டு அப்புறம் அதிலேயே குளிச்சாப்பலே எரிகிறது, கட்டை விரல் வரைக்கும்,” என்றேன்.

“கொஞ்சம் பொறும்” என்றார்.

கொஞ்ச நேரத்தில் அந்த எரிச்சல் அடங்க ஆரம்பித்து தேசியக் கொடி மாதிரி உணர்ந்தேன். மார்புவரை சூடாகவும், வயிறு வரை மிதமாகவும், அப்புறம் கீழே ஜில் என்றும். அப்புறம் அந்த ஜில் கொஞ்சம் கொஞ்சமாக மேலே ஏறியது. எப்பேர்ப்பட்ட ஜில்! இரண்டு காது நுனிகளைத் தவிர மற்ற இடங்கள் எல்லாம் பரவியது ஜில். அப்புறம் மருந்து வேலை செய்தது. ‘ய்ய்ய்ய்ய்ப்’ என்று சொல்லி உடம்பை உதறிக்கொண்டேன். அப்புறம் என் கண்கள் சுழன்று சுழன்று என் வார்த்தைகள் முழுவதும் குழற ஆரம்பிக்க ... பாதங்களுக்கு கீழ் ஹோவர்கிராஃப்ட் மாதிரி ஒரு விதமாக உணர்ந்தேன். பேச்சு சக்தி வந்ததும் புலவர் தெரிந்தார். “சரியான சரக்கு வாத்யாரே. இன்னும் கொஞ்சம் இருக்கா?” என்று கேட்டேன்.

“மேலே தேவையிருக்காது. என் நண்பரே. இனி நீர் நீடூழி வாழ்வீர்” என்றார்.

“டாக்டர்” என்று கூப்பிட்டேன்.

“பையா!” என்று குளித்த பறவை போல அவர் சிலிர்த்துக் கொண்டார்.

“டாக்டர்? ஆர் யூ ஆல் ரைட்? யார் தெச்ச சட்டை, எங்க தாத்தா தெச்ச சட்டை. சொல்லுங்க பார்க்கலாம்.”

“பையா, எனக்குப் புதிதாகப் பிறந்தாற் போல இருக்கு. எல்லாம் அலம்பிவிட்டாப் போல க்ளியராத் தெரிகிறது.”

“எனக்குக்கூட ... ஆனா டாக்டர் ...”

“என்ன?”

“என் இதயத் துடிப்பு ஒன்றும் குறையவில்லையே” என்றேன் மார்பைப் பிடித்துக்கொண்டு.

“அது இவ்வளவு கடிதில் நிகழாது. மெதுவாக மெதுவாகச் சில வருடங்களில்தான் தெரியும்,” என்றார் செந்தில் நாதர்.

“புலவரே! ரொம்ப தாங்க்ஸ். டாக்டர், ரொம்ப தாங்க்ஸ். இந்த மருந்திலே விஷயம் இருக்கோ இல்லையோ சாப்பிடறதே ஒரு அனுபவம்!”

டாக்டர், “பையா, இந்த மருந்து நிச்சயம் வேலை செய்யும். நிச்சயம் 21ஆம் நூற்றாண்டிலே நான், நீ, புலவர் மூன்று பேரும் இருக்கப் போகிறோம். 22ஆம் நூற்றாண்டிலே 23ஆம் நூற்றாண்டிலே...” என்றார்.

“வருகிறேன் டாக்டர். புலவரே விடை பெறுகிறேன்” என்று எனக்குப் பிடித்த ‘ர்ர்ர்ருக்குமணியே ப்பார பாரபார’ என்று பாடிக்கொண்டே கிளம்பினேன்.

நான் மருந்தைச் சாப்பிட்டுவிட்டேன். அது நிஜமாகவே வேலை செய்யுமா, நான் நீடூழி வாழ்வேனா என்ற கேள்விகள் உங்களுக்கு எழும்பலாம். உங்களுக்கும் என்னைப் போல் சந்தேகம் ஏற்படலாம். உங்கள் சந்தேகங்களை எல்லாம் நிவர்த்திக்க என்னால் இப்பொழுது முடியாது. நேற்றுத்தான் சாப்பிட்டிருக்கிறேன். அதனால் நான் ஒன்று செய்கிறேனே. மறுபடி இந்தக் கதையை இந்தப் பத்திரிகையின் 2069ஆம் வருஷம் மார்ச் மாத இதழ் ஒன்றில் தொடர்கிறேனே!

சரியா?

*1969*

www.writersujatha.com